

துறைமுகம் சட்டமன்றத் தொகுதி,சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் ரம்ஜான் பண்டிகையை முன்னிட்டு சென்னை பாரிமுனையில் நடந்த விழாவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் இஸ்லாமிய பெருமக்களுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கினார். உடன் அமைச்சர் பி.கே. சேகர்பாபு, தயாநிதி மாறன் எம்.பி., மேயர் பிரியா ராஜன், எம்.எல்.ஏ.க்கள் தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், வெற்றி அழகன் ஆகியோர் உள்ளனர்.



தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (20.04.2023) முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.இராஜ கண்ணப்பனின் மகன் டாக்டர் திலீப் குமார் தனது பிறந்த நாளை யொட்டி சந்தித்து வாழ்த்து பெற்றார். உடன் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன் உள்ளார்.

# பழிவாங்கவும் பாரபட்சம் காட்டவுமா விசாரணை அமைப்புகள்?

## ‘ஆனந்த விகடன்’ ஏடு தலையங்கம்!

*சென்னை, ஏப். 22 -*

டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவாலிடம் மத்திய புலனாய்வுத்துறை (சிபிஐ) நடத்திய ஒன்பது மணி நேர விசாரணை, பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. ‘புதிய மதுபானக் கொள்கையை நடைமுறைப்படுத்தியதில் வணிகர்களுக்கு சலுகைகளை வழங்க, சுமார் நூறு கோடி ரூபாய் அளவுக்கு அரவிந்த் கெஜ்ரிவாலின் ஆம் ஆத்மி அரசு ஊழல் புரிந்துள்ளதா’ என்பதை விசாரிக்க டெல்லி துணைநிலை ஆளுநர் சக்சேனா அனுமதி அளித்ததன் பேரில் நடைபெறும் விசாரணை இது. இதே மதுபானக் கொள்கை ஊழல் விவகாரத்தில் ஏற்கெனவே டெல்லி துணை முதல்வர் மணிஷ் சிசோடியா கைது செய்யப்பட்டுச் சிறையில் இருக்கிறார். ஒய்.எஸ்.ஆர் காங்கிரஸ், பாரத் ராஷ்ட்ரிய சமிதி என்று பல கட்சிகளின் தலைவர்கள் இந்த வழக்கில் விசாரிக்கப்பட்டு வருகின்றனர். இந்தக் கட்சியினர் மட்டுமல்ல... காங்கிரஸ் தொடங்கி பல எதிர்க்கட்சியினரையும் சி.பி.ஐயும் அமலாக்கத்துறையும் துரத்துகின்றன. சோனியா காந்தியும் ராகுல் காந்தியும்கூட விசாரணைக்கு ஆளாகினர்.



“தவறுகளை விசாரிப்ப தற்காகவே அந்த அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் தவறு செய்தால் அவர்களை இந்த அமைப்புகள் விசாரிப்பதில் என்ன தவறு?” என்று பா.ஜ.க தலைவர்கள் பலர் பேசுகிறார்கள். ஊழலும் முறைகேடுகளும் வேரறுக்கப்பட வேண்டும் என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்தில்லை. ஆனால், இந்த அமைப்புகளின் விசாரணைக்கரம் நீளும் தருணங்களும், இவற்றால் வளைக்கப்படும் மனிதர்களும், இந்த அமைப்புகள் பாரபட்சமின்றி நடக்கின்றனவா என்ற சந்தேகத்தையே ஏற்படுத்துகின்றன.

குஜராத்தில் மாநிலங்களவை உறுப்பினர் தேர்தல் நடைபெற்ற போது, அம்மாநில காங்கிரஸ் எம்.எல்.ஏக்களை பெங்களூரு அழைத்து வந்து கர்நாடக காங்கிரஸ் தலைவர் டி.கே.சிவக்குமார் பாதுகாப்பில் வைத்திருந்தனர். அந்த நேரத்தில் அவர் வருமான வரி சோதனைக்கும் அமலாக்கத் துறை சோதனைக்கும் ஆளானார். 2020 ஜூலையில் ராஜஸ்தானில் அசோக் கெலாட் தலைமையிலான காங்கிரஸ் அரசுக்கு எதிராகக் கலகம் செய்தார் துணை முதல்வர் சச்சின் பைலட். அப்போது எம்.எல்.ஏக்களைப் பாதுகாத்த முதல்வர் கெலாட்டின் சகோதரர் அமலாக்கத்துறை சோதனைக்கு ஆளானார்.

இப்போது அஸ்ஸாம் முதல்வராக இருக்கும் ஹிமந்த பிஸ்வா சர்மா, காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் அமைச்சராக இருந்தவர். சாரதா சிட் ஃபண்ட் ஊழல் வழக்கில் சி.பி.ஐயால் விசாரணை செய்யப்பட்டவர்.அவர் பா.ஜ.கவுக்கு வந்ததும் காட்சிகள் மாறிவிட்டன. திரிணாமுல் காங்கிரஸில் இருந்த சுவேந்து அதிகாரி, தெலுங்கு தேசம் கட்சியில் இருந்த ஒய்.எஸ்.சௌத்ரி என்று சிலர் பா.ஜ.கவுக்கு வந்தபிறகு அவர்கள் மீதான வழக்குகள் வேகம் எடுக்கவில்லை. மகாராஷ்டிரா எம்.எல்.ஏ ஹர்ஷ்வர்தன் பாட்டீல், “காங்கிரஸிலிருந்து பா.ஜ.கவுக்கு வந்தபிறகு விசாரணைத் தொந்தரவுகள் இல்லாமல் நிம்மதியாகத் தூங்குகிறேன்” என்றார். அதே மகாராஷ்டிராவின் சாங்லி தொகுதி எம்.பி சஞ்சய் பாட்டீல், “பா.ஜ.கவில் சேர்ந்தபிறகு எனக்கு அமலாக்கத் துறை பற்றி பயமில்லை” என்று மேடையிலேயே பேசினார்.

2014ம் ஆண்டுக்குப் பிறகு அரசியல்வாதிகள்மீது அமலாக்கத் துறை வழக்குகள் பாய்வது நான்கு மடங்கு அதிகரித்துள்ளது. 95% வழக்குகள் எதிர்க்கட்சியினர் மீதுதான் என்கிறது புள்ளிவிவரம். எதிர்க்கட்சியினரைப் பழிவாங்குவதற்கும், தங்களுக்கு சாதகமான அரசியல் நிலைப்பாட்டை எடுக்க பேரம் பேசுவதற்கும்தான் இந்த சோதனைகளும் வழக்குகளும் பயன்படுத்தப்படுகின்றன என்பது பலரின் குற்றச்சாட்டு. தங்கள் நேர்மையை இந்த விசாரணை அமைப்புகள் மக்கள் மன்றத்தில் உறுதி செய்ய வேண்டிய தருணமிது.

**-நன்றி**
**ஆனந்த விகடன்**
**26.4.2023**

## நிலுவையில் உள்ள வரி பாக்கியை வசூலிக்க ‘சமாதான் திட்டம்’!

# வணிக வரி நிலுவை ரூ.27,527 கோடி!

## பேரவையில் அமைச்சர் பி. மூர்த்தி தகவல்

*சென்னை, ஏப். 22 -*

வணிக வரித் துறையில் மொத்தம் ரூ.27,526.82 கோடி வரி நிலுவை உள்ளது. நிதியமைச்சர், முதல்வர், ஆளுநர் ஒப்புதலுக்கு பிறகு, வணிகர்களுக்கு வாய்ப்பு தரும் சமாதான் திட்டம் செயல்படுத்தப்படும் என்று சட்டப்பேரவையில் அமைச்சர் பி.மூர்த்தி தெரிவித்தார்.

வணிக வரித் துறையில் நிலுவையில் உள்ள வரியை வசூலிக்க,சமாதான் திட்டம் கொண்டுவருவது குறித்த கவனஈர்ப்பு தீர்மானத்தின் மீது அதிமுக உறுப்பினர் பொள்ளாச்சி ஜெயராமன் பேசினார். “கடந்த காலங்களில் சமாதான் திட்டத்தில் வசூலிக்கப்பட்ட தொகைகள், ஒவ்வொரு சட்டத்தின் கீழும் நிலுவையில் உள்ள தொகைகள் குறித்து தெரிவிக்க வேண்டும்” என்று அவர் கூறினார்.

இதற்கு பதில் அளித்து வணிக வரித் துறை அமைச்சர் பி.மூர்த்தி பேசியதாவது:



வணிக வரி துறையில் நிலுவை வரிகளை செலுத்தி, தீர்வு காண வணிகர்களுக்கு வாய்ப்பு அளிக்கும் ஒருமுறை திட்டமான சமாதான திட்டத்தை முதலில் கடந்த 1999ல் அப்போதைய முதல்வர் கருணாநிதி கொண்டுவந்தார். பின்னர், 2002, 2006, 2008, 2010, 2011ம் ஆண்டுகளிலும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. தற்போது வரி நிலுவையாக, தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி இனங்களில் ரூ.16,732.39 கோடி, மத்திய விற்பனை வரி இனங்களில்ரூ.6,532.75 கோடி, தமிழ்நாடு பொதுவிற்பனை வரி இனங்களில் ரூ.4,107.85 கோடி என பல சட்டங்களின் கீழ் மொத்தம் ரூ.27,526.82 கோடி வரி நிலுவை உள்ளது.

கடந்த 2021 ஆகஸ்டில் பேரவையில் அறிவிக்கப்பட்டபடி, சமாதான் திட்டம் தொடர்பாக கோப்பு தயாரித்து, ஆளுநர் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டது. ஆளுநர் கடந்த 2022 மே 10ம் தேதி ஒப்புதல் வழங்கினார். அன்று, பட்ஜெட் கூட்டத் தொடரின் கடைசி நாள் என்பதால் சட்ட மசோதா அறிமுகம் செய்யஇயலவில்லை. எனவே, அவசரச்சட்டமாக இயற்ற உத்தேசித்து, சட்டத் துறையை தொடர்ந்து, நிதித் துறைக்கு கோப்புகள் அனுப் பப் பட்டன.

நிதி அமைச்சர் கேட்டுள்ள விளக்கங்கள் அளிக்கப்பட்டுள்ள நிலையில், சமாதான் திட்டம் செயல்படுத்துவதற்கான சட்ட மசோதா குறித்த கோப்பு தற்போது அவரது ஒப்புதலுக்காக நிலுவையில் உள்ளது. நிதி அமைச்சர் ஒப்புதலுக்கு பிறகு, முதல்வர், ஆளுநருக்கு அனுப்பி, அவர்களது ஒப்புதல் பெறப்பட்ட பிறகு, சட்ட மசோதா நிறைவேறப்பட்டு, சமாதான திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

## ‘கலைஞர் செய்திகள்’ தொலைக்காட்சி சார்பில்

# தூத்துக்குடியில் “எங்கள் ஊர் எங்கள் பெருமை விருதுகள்” பிரமாண்ட விருது வழங்கும் விழா!

## இன்று நடைபெறுகிறது!

*தூத்துக்குடி, ஏப். 22-*

தமிழ்நாட்டில் ஒவ்வொரு மாவட்டமும் தனித்தன்மை மிக்க சிறப்புகளை கொண்டுள்ளன. அவற்றை அந்தந்த மாவட்ட மக்களையே பேசவைப்பதும், அவர்களுக்கு மத்தியில் வாழும் சாதனையாளர்களை கவுரவிப்பதுமே ’எங்கள் ஊர் எங்கள் பெருமை விருதுகள்’ நிகழ்ச்சியின் நோக்கம். கடந்த 2020ஆம் ஆண்டில் திருப்பூர், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களிலும், கொரோனா முழுமுடக்கத்திற்கு பின்னர் 2022ஆம் ஆண்டில் சேலம், திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களிலும் நடத்தப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து, இந்த நிகழ்ச்சி இன்று (ஏப்ரல் 22, 2023) தூத்துக்குடியில் உள்ள மாணிக்கம் மஹாலில் காலை 10 மணிக்கு தொடங்கி நடைபெறுகிறது.

தொழில் முனைவு, கல்வி, இலக்கியம், திரைத் துறை, விளையாட்டு, வேளாண்மை என பல்வேறு பிரிவுகளில் சிறந்து விளங்கும் தூத்துக்குடி மண்ணின் மைந்தர்கள் விருது பெற உள்ளார்கள். மேலும் மாவட்டத்தின் முக்கிய ஆளுமைகள் பலரும் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டு, தூத்துக்குடியின் பெருமையை பறைசாற்ற உள்ளனர்.

## தெள்ளார் கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில்

# பட்ஜெட் விளக்கப் பொதுக்கூட்டம்!

## மாவட்ட செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன் தலைமையில்

*வந்தவாசி, ஏப். 22-*

திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி அடுத்த தெள்ளார் கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் தமிழ்நாட்டின் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் 70 வது பிறந்த நாள் விழா மற்றும் தமிழ்நாட்டின் பட்ஜெட் விளக்க பொதுக் கூட்டம் தி.மு.க. மாவட்ட செயலாளர் எம்.எஸ்.தரணி வேந்தன் தலைமையில் திரேசாபுரம் கிராமத்தில் பேசுகையில் பாண்டிச்சேரி உள்பட தமிழ்நாட்டில் அனைத்து நாடாளுமன்ற தொகுதிகளிலும் திமுக தான் வெல்லும் அது மட்டுமல்ல இந்தியாவின் பாரத பிரதமர் யார் என்று நமது தளபதி மு.க. ஸ்டாலின் தான் கையை காட்ட வேண்டும் என்று பேசினார்.

நிகழ்ச்சியில் வந்தவாசி சட்டமன்ற உறுப்பினர் எஸ். அம்பேத்குமார், தலைமை கழக பேச்சாளர்கள் கந்திலி கரிகாலன், பவானி கண்ணன், தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஆர்.சீதாபதி, ஒன்றிய செயலாளர்கள் ப.இளங்கோவன், டி.டி.ராதா, கே.ஆர்.பழனி, சி.ஆர்.பெருமாள், ஆர்.நந்தகோபால், தெள்ளார் கமலாட்சிஇளங்கோவன், வி.ராமு, ஏகாம்பரம், ரவிச்சந்திரன், எஸ்.பெருமாள், சௌரிராஜன், ஆ.தயாளன், டி.கே.மோகன், ஜலால், நகர செயலாளர்கள், ஒன்றிய செயலாளர்கள், கிளைக் கழக நிர்வாகிகள், கழகத் தொண்டர்கள் என ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்டனர்.

## இன்று பாவேந்தர் நினைவு நாள்!

# புதியதோர் உலகம் செய்வோம்!

“நிமிர்ந்த நோக்கு!
நெரித்த புருவம்!
நீர் வீழ்ச்சி ஓசை!
நெற் கதிர்கட்டு
மீசை! “
தோற்றம் கொண்டவர்
என்று முத்தமிழறிஞர்
கலைஞர் அவர்களால்
போற்றப்பட்ட

புரட்சிக்கவிஞர்
அவர்களின்
60 ஆவது ஆண்டு
நினைவு நாள்



சாதி மத பேதங்கள்
மூட வழக்கங்கள்
தாங்கி நடைபெற்று
வரும் சண்டை
உலகுதனை
ஊதையினில்
துரும்புபோல்
அலைக்கழிப்போம்!
பின்னர்
ஒழித்திடுவோம் !
புதியதோர்
உலகம் செய்வோம்!
பேதமிலா அறிவுடை
அவ்வுலகிற்கு
பேசு சுயமரியாதை

எனும் பெயர்
வைப்போம் !
ஈதே காண் !
சமூகமே !
யாம் சொன்ன
வழியில்
ஏறு நீ ! ஏறு நீ !
ஏறே !!!
...என்ற
புரட்சிக்கவிஞர்
அவர்களின்
நினைவு நாளில்
நிறைவேற்ற
உறுதி ஏற்போம் !

**கே.வி.ஆர்**

## இன்று பாவேந்தர் நினைவு நாள்!

# புரட்சிக் கவியின் புகழ்வாழ்க!



நீந்தும் கப்பல் மூழ்கி விடாமல்
நிறுத்தும் நங்கூரம்! அந்த
நெடிய வெற்பையும் இடித்திடும் தோள்கள்!
நிமிர்ந்த கம்பீரம்!
பூந்தமி ழுக்குத் தீங்கொன்று வந்தால்
பொங்கிடும் வெங்கோபம்! மொழிப்
போருக்குத் தீட்டிய வரிகள் அனைத்தும்
பூபாளச் சங்கீதம்!

தமிழுக்கும் அமுதென்று பேர்என்று கூவினான்!
தடந்தோள் உரமூட்டி! அவன்
தாலாட்டுப் பாட்டிலும் எழுப்பிவிட் டான்!நமைத்
தன்மான உணர்வேற்றி!
சிமிழுக்குள் கிடந்த தமிழுக்குத் தந்தான்
சிறகுகள்! ஒளிகூட்டி! எட்டுத்
திசைகளும் தமிழை வணங்கவைத் தான்!மலைச்
சிகரத்தில் கொடிநாட்டி!

கொஞ்சும் அழகின் சிரிப்பால் இன்பம்
கொடுத்தான் துயர்மாற்றி! சுடர்
கொளுத்தி மகிழ்ந்தான் இருண்ட வீட்டிலே
குடும்ப விளக்கேற்றி!
தஞ்சம் வந்தமொழி தமிழை ஆளவோ?
தடுத்தான் இடர்வீழ்த்தி! இளந்
தமிழச்சி கையில் கத்தி கொடுத்தான்
தாய்த்தமிழ் நிலம்வாழ்த்தி!

கழுத்துப் பிடரி சிலிர்க்க எழுந்தான்
கண்களில் அனல்தேக்கி! இங்குக்
கால்வைத் திடுமோ இந்தி?என்று ஆர்த்தான்
களத்தில் பகைநோக்கி!
எழுத்து வடிவில் நெருப்பை உமிழ்ந்தான்
எரிமலை உண்டாக்கி! அவன்
எடுத்துப் பிடித்தது எழுதுகோல் அல்ல!
எந்திரத் துப்பாக்கி!

மைந்தர்க ளே,தமிழ் அன்னையைக் காக்க
வருகெனக் குரல்கொடுத்தான்! இங்கு
மானுடச் சமுத்திரம் நான்என்று கூவும்
மகத்துவம் அவன்படைத்தான்!
பைந்தமிழ் எங்கள் உயிர்என்று கூறிப்
பாட்டில் முரசொலித்தான்! தமிழ்ப்
படைமறம் காட்டிப் பகைவரை வெல்லப்
பாண்டியன் பரிசளித்தான்!

வீரத் தமிழ்க்கவி இன்றிருந் தால், புது
வீறுடன் நின்றிருப்பான்! தமிழ்
வெற்றி மாலையை முதல்வர்க்குச் சூட்ட
விரும்பிச் சென்றிருப்பான்!
பேரன் “தளபதி” ஆட்சியின் மாட்சிப்
பெருமையைக் கண்டிருப்பான்! உயர்
பீடு மிகும்தமிழ் நாடும் இதுவெனப்
பெருமிதம் கொண்டிருப்பான்!

அதிர்வலை தந்த கவிஞன் நினைவுநாள்!
அவன்தன் தாள்வாழ்க! அவன்
அள்ளிப் பொழிந்த அருவி நிகர்த்த
அமுதத் தமிழ்வாழ்க!
புதுவைப் புலவன் காண விழைந்த
புதுமைப் புவிவாழ்க! புகழ்
போற்றிக் கூடுவோம்! ஏற்றிப் பாடுவோம்!
புரட்சிக் கவிவாழ்க!



கவிச்சுடர்
**கவிதைப்பித்தன்**